Redington
SEAMLESS PARTNERSHIPS

# ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம்: எஸ்பில் கிண்டி இல்லம், 95, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032. CIN: L52599TN1961PLC028758
தொலைபேசி எண்: +91-44-42243353, தொலைநகல் எண்: +91-44-22253799
மின்னஞ்சல்: investors@redington.co.in வலைதளம்: www.redingtongroup.com

## அறிவிப்பு

**[நிறுவனத்தின் சமப்பங்குகளை முதலீட்டாளர் கல்வி பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு பரிமாற்றம் செய்தல் (IEPF)]**

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு தணிக்கை மாற்றல் மற்றும் திருப்பி செலுத்துதல்) விதிகள், 2016 (விதிகள்) விதி 6 உடன் நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 124க்கு இணங்க, நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில்:

ஈவுத்தொகை செலுத்தப்படாத அல்லது உரிமை கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் எந்த பங்குகளுக்கு ஈவுத்தொகை வழங்கப்படாமலோ அல்லது பங்குதாரரிடமிருந்து உரிமை கோரப்படாமலோ தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் அல்லது அதற்க்கு மேல் இருந்தால், அவற்றை இந்திய அரசின் முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு (IEPF) மாற்றுவது நிறுவனத்தின் அவசியமாகும்.

மேற்கூறிய விதிகளின்படி, IEPF கணக்கிற்கு மாற்றவேண்டிய நிலையில் உள்ள சம்பந்தப்பட்ட பங்குகளின் உரிமையாளர்களுக்கு, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி, தனித்தனியாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விதி எண் 6 (3)-ன் கீழ், https://redingtongroup.com/india/shareholders_information/ என்ற எமது இணைய தளத்தில், மாற்றப்பட வேண்டிய பங்குகளின் உரிமையாளர் பெயர், ஃபோலியோ எண்/டீமாட் கணக்கு எண், பங்குகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து எந்தவொரு தகவலும் வராவிடில், விதிகளை பூர்த்தி செய்யும் வகையில், நிறுவனம், விதிகளில் குறிப்பிட்டுள்ள நியதிகளின்படி உரிய நாட்களுக்குள் பங்குகளை IEPF கணக்கில் சேர்த்துவிடும். பின்னர், IEPF கணக்கில் சேர்க்கப்பட்ட பங்குகள் மற்றும் அவை மீதான கோரப்படாத ஈவுத்தொகைகளை நிறுவனத்திடமிருந்து கோரப்படமுடியாது.

நிதிக்கு மாற்றப்பட்ட பங்குகள் மற்றும் கோராப்படாத ஈவுத்தொகைகளின் உரிமைதாரர்கள், IEPF கணக்கில் செலுத்தப்பட்ட அப்பங்குகள், அவைமீதான ஈவுத்தொகைகள் மற்றும் அவற்றால் விளையும் பயன்களை ஆணையம் நிர்ணயித்துள்ள நியதிகளை பின்பற்றி கோரலாம்.

மேலும் தகவல்கள்/விளக்கங்கள் பெற, பங்குதாரர்கள், நிறுவனத்தின் பதிவாளர் & பங்கு மாற்று முகவர் M/s. கேமியோ கார்பொரேட் சர்வீசஸ் லிமிடெட், பிரிவு : ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட், சுப்ரமணியன் பில்டிங், 5-வது மாடி, எண் 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை-600002 அவர்களை அணுகவும். தொலைபேசி எண்: 044 28460390. மின்னஞ்சல் முகவரி : investor@cameoindia.com.

ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்டுக்காக
மு. முத்துக்குமாராசாமி
நிறுவனச் செயலாளர்

தேதி: மே 13, 2019
இடம்: சென்னை